# உங்கள் நிரப்புத்தொகைகளை இரட்டிப்பாக்குங்கள்

## வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையில் ஓய்வுக்காலக் கணக்கில் தொகை நிரப்பும் திட்டத்துடன்

**வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையில் ஓய்வுக்காலக் கணக்கில் தொகை நிரப்பும் திட்டம் (MRSS), மத்திய சேம நிதி சேமிப்பு குறைவாகவுள்ள 55 வயதுக்கு மேற்பட்ட சிங்கப்பூரர்கள் கூடுதலாகச் சேமிக்க உதவுகிறது. அவர்கள் தங்களது ஓய்வுக்காலக் கணக்கில் ரொக்கமாகச் செலுத்தும் நிரப்புத்தொகைகளுக்கு, ஆண்டுக்கு $2,000 வரை இணையான மானியம் கிடைக்கும்*.**

*$20,000 வாழ்நாள் வரம்புடன்.




## நன்மைகள்:

- வெள்ளிக்கு வெள்ளி வழங்கப்படும் இணையான மானியத்துடன் உங்களுக்கான ரொக்க நிரப்புத்தொகையை இரட்டிப்பாக்குங்கள்
- ஆண்டுக்கு 6%^ வரையிலான மத்திய சேம நிதி வட்டி விகிதத்துடன் உங்கள் ஓய்வுக்காலக் கணக்கிலுள்ள சேமிப்பைப் பெருக்குங்கள்
- ஓய்வுக்காலத்தில் நீங்கள் பெறும் மாதாந்தர வழங்குதொகைகளை அதிகரியுங்கள்

| நீங்கள் செலுத்தும் ரொக்க நிரப்புத்தொகை... | உங்களுக்குக் கிடைக்கும் இணையான மானியம்... | உங்களது ஓய்வுக்காலக் கணக்கிலுள்ள சேமிப்பில் மொத்த அதிகரிப்பு... |
|---|---|---|
| மாதத்திற்கு $50 | ஆண்டுக்கு $600 | $1,200 |
| மாதத்திற்கு $168 | ஆண்டுக்கு $2,000 (அதிகபட்சம்) | $4,016 |

## தகுதிநிலை

நீங்கள் MRSS திட்டத்திற்குத் தகுதி பெற்றால், ஒவ்வோர் ஆண்டின் துவக்கத்திலும் மத்திய சேம நிதிக் கழகம் உங்களிடம் தெரியப்படுத்தும்.

cpf.gov.sg/checkmrss

நீங்கள் இணையம் வழியாகவும் உங்கள் தகுதிநிலையைத் தெரிந்து கொள்ளலாம்.

## ரொக்க நிரப்புத்தொகை செலுத்துவது எப்படி?

**பின்வரும் தெரிவுகளில் ஒன்றைப் பயன்படுத்தி, டிசம்பர் 31ஆம் தேதிக்குள் உங்களது ஓய்வுக்காலக் கணக்கில் ரொக்கமாகத் தொகை நிரப்புங்கள்:**

**பேநவ்** — oதெரிவு 1

**ஜைரோ** — தெரிவு 2 (சிறிய தொகையாக இருந்தாலும் வழக்கமான முறையில் நிரப்புத்தொகைகள்)

**நிரப்புத்தொகை செலுத்த இப்போதே *cpf.gov.sg/topup* இணையத்தளத்தை நாடுங்கள்!**

இணையான மானியம் அதற்கடுத்த ஆண்டின் துவக்கத்தில் உங்களது ஓய்வுக்காலக் கணக்கில் சேர்க்கப்படும்.

**MRSS* மானியம் பெறும் ரொக்க நிரப்புத்தொகைகள் வரி நிவாரணத்திற்குத் தகுதி பெறமாட்டாது.

^ஓய்வுக்காலக் கணக்குக்கு ஆண்டுக்கு 4% அடிப்படை வட்டி என்பதன் அடிப்படையிலானது. 55 வயதை எட்டிய மூத்தோருக்கு, மொத்த மத்திய சேம நிதி இருப்புத்தொகையில் முதல் $30,000 தொகைக்கு 6% வரையிலும் (சாதாரணக் கணக்குக்கு $20,000 வரம்புண்டு), அடுத்த $30,000 தொகைக்கு 5% வரையிலும் (சாதாரணக் கணக்குக்கு $20,000 வரம்புண்டு) வட்டி கிடைக்கும்.

**மேலும் தெரிந்துகொள்ள, cpf.gov.sg/mrss இணையத்தளத்தை நாடுங்கள்**